உளி- 1 | ஓசை-67 | நவம்பர்-2022 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

அட்டைப்படம் :
படைப்பு டிசைன் டீம்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

சந்துரு ஆர்.சி - 4
மா. காளிதாஸ் - 5
அ.சீனிவாசன் - 6
அழ.இரஜினிகாந்தன் - 6
பிரியா பாஸ்கரன் - 7
பா.சிவகுமார் - 8
சாண்டில்யன் விவேகானந்தன் - 8
தி.கலையரசி - 9
திப்பு - 10
பூங்கோதை கனகராஜன் - 10
ச. இராஜ்குமார் - 10
ரிஸ்கா முக்தார் - 11
ச.ஆனந்தகுமார் - 12
ச.ஜெய் - 13
கோ. பாரதிமோகன் - 14
தீபிகா நடராஜன் - 14
ஜலீலா முஸம்மில் - 15
ஐ.தர்மசிங் - 16
கோ. ஸ்ரீதரன் - 17
மகிழினி காயத்ரி - 18
மு. பெ. சத்தியநேசன் - 19
காயத்ரி ராஜசேகர் - 20
க. அய்யப்பன் - 20
தி. இராஜபிரபா - 21
வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன் - 22
கதிரவன் வீ - 23
சுஜாதா கண்ணன் - 23
செ.ரா.கிருஷ்ண குமாரி - 24
மகேஷ் சிபி - 24
ஜோதி சரண் - 25
பிரபுசங்கர் க - 26
சரண்யாசத்தியநாராயணன் - 27
முகமது பாட்சா - 28
சங்கரி சிவகணேசன் - 28
அன்பு மணிவேல் - 29
காசாவயல் கண்ணன் - 29
கோ.லீலா - 30
எஸ்தர் ராணி - 31
கே.பாலன் வடக்கத்தியான் பட்டி - 32
கவி செல்வா - 33
சசிகலா திருமால் - 34
ஜே.ஜே.அனிட்டா - 35
குடந்தை அனிதா - 36
சம்பத் கிருஷ்ண குமார் - 36
ரா.ராஜசேகர் - 36
கா.ரஹ்மத்துல்லாஹ் - 37
நயினார் - 37
தோழன் பிரபா - 38
மருதம்.ஷபகஜலஷ்மி - 38
யாழினி - 38
உமா மஹேஸ்வரி பால்ராஜ் - 39



பெரிய அலை வரும்போதெல்லாம்
அழுத்தமாய்
அவன்
கை பிடித்துக்கொள்கிறாள்.

அதில்
அவர்களின் பெருங்காதல்
பெருங்கடலை நனைக்கிறது.

கரை மோதிய அலைகள்
பின் செல்லும்போது
மணல் பறிக்கும்
பாதங்களின் குறுகுறுப்பில்
இடறி விழாமலிருக்க
இன்னுமதிகமாய்
கையழுத்துகிறாள்.

குழந்தைபோல்
விளையாடி முடித்து
ஈர மணலில் அழுத்தமாய்
இருவரின் கால்தடம் பதிக்க
அடம்பிடித்துச் சிணுங்குகிறாள்

யாருடைய பாதச்சுவட்டை
முதலில்
அலையழிக்கிறது பார்ப்போமென
பந்தயம் வேறு போடுகிறாள்

நெடு நேரம் கழித்து
பேரலை வந்து
இருவரின் சுவடுகளையும்
ஒன்றாகவே
இழுத்துக்கொண்டு
போனதைக் கண்டு
ஏமாற்றமடைகிறாள்.

அலைகள் மட்டுமா.?

காலமும் இப்படித்தான்
இருவரின் காதலுக்குள்ளும்
பள்ளம் பறித்து
வாழ்வின் தடங்களை
மொத்தமாய்
அழித்துவிட்டுச் செல்லுமென்று
அன்று
அலைகள் உரைத்ததை
இருவருமே
அறியாமல் போனார்கள்.

*சந்துரு ஆர்.சி*



அந்த அறைக்குள் நுழையும் முன்
அவர்கள் எல்லாவற்றையும்
பிடுங்கிக் கொண்டார்கள்.
ஒரேயொரு துணி மட்டுமே மறைத்திருந்தது
நிர்வாணத்தை.

உடம்பை அசைக்கக் கூடாது
சொல்லும் போது தான்
கண்ணைத் திறக்க வேண்டும்
மூச்சை நன்றாக உள்ளிழுத்து விடவேண்டும்.

உருவமற்ற நான்
நிழற்படங்களாக மாறத் தொடங்கினேன்.

கடைசியாக அவர்கள் சமர்ப்பித்த
ஒருபக்க அறிக்கையின்படி
எனக்கு எதுவுமே இல்லை.

என்ன எந்திரமோ
என்ன நுண்ணொளியோ
தொடக்கத்திலிருந்தே
நான் இதைத் தான் சொன்னேன்:
"என்னிடம் எதையும் கண்டுபிடிக்க முடியாது
மீறிக் கண்டுபிடித்தால்
நான் தான்
அதைத் தெளிவுபடுத்தவும் வேண்டும்."

ஒட்டுப்பசைகளைத் துடைத்துவிட்டுப்
பழையபடி என் அறைக்குத் திரும்புகிறேன்,
அறை முழுக்க நிரம்பி இருக்கிறது
'அகச் சிவப்பு'க் கதிர்.

மா. காளிதாஸ்



பூ
மலர ஆரம்பித்தவுடன்
வாட ஆரம்பித்துவிடுகிறாள்
பூக்காரி.

அ.சீனிவாசன்

மாதமொரு முறை
மக்கர் செய்யும்
கேஸ் அடுப்பின்
லைட்டரை
மாற்றிய படியே
இருக்கிறாள்
மனைவி
எதிர் வீட்டில் எரியும்
குமுட்டி அடுப்பருகே
கால்கடுக்க நின்று
குழிக்கரண்டியில்
இரவல் நெருப்பு
வாங்கிவந்து
அடுப்பு பற்றவைத்து
ஆக்கிப்போட்ட
அம்மாவை–
நினைத்துக் கொள்கிறேன்..!

அழ.இரஜனிகாந்தன்

¼¶ «ïê‹



தப்பியோட நினைக்கிறது
யுத்த தேவியாய்ச் சண்டையிட

கட்டிப்போட நினைக்கத்
திமிறுகிறது காளையாய்

கருத்தரித்த எதிர்பார்ப்பின்
கேள்விகளில்
சித்திரவதையென அலறுகிறது
மூச்சு திணற

அங்குச விவாதங்களால்
வெடிக்கின்ற பிரளயத்தில்
கவிதையென மின்னும் கண்களில்
சிவப்பு வரிகளே மிச்சம்

கட்டவிழ்த்து விடு

சிறைப்படுத்தா உறவின்
ஆன்மச் செல்களில் ஊடுருவி
பெருங்குன்றென எழும்பும்
நேசச்சுயம்பு.

பிரியா பாஸ்கரன்

## ïèó^F™ ñó í ‹

குளிரூட்டப்பட்ட பெட்டியில் படுத்துக் கிடந்தாள்
அம்மா
தூங்கும் போது மரணம்
நல்ல சாவென பேசிக் கொண்டார்கள்
உயர் இரத்த அழுத்தம்
புருஷனை இழந்த துக்கம்
இரண்டாவது பையனின் உடல்நிலை
ஆகாத மருமகள்களென
காரணங்கள் பல அலசப்பட்டு
மெல்லத் தொடங்கின வெற்றிலைவாய்கள்
எப்போ பாடிய எடுக்க போறீங்க என்று கேட்ட
பக்கத்து வீட்டுக்காரரின் கடைவாயில் துருத்திக்
கொண்டு
தெரிந்தன கோரப்பற்கள்
ஸிமிறி குறுஞ்செய்திகளில்
நிரம்பியது அலைபேசி
எல்லோரும் வந்துட்டாங்களா
என்றகேள்விக்கு
மயான அமைதி நிலவியது
செலவுகளை எப்படி
பங்கிட்டுக் கொள்வது
உள்ளே விவாதம் தொடங்கிய
கொஞ்சநேரத்தில்
வீசத் தொடங்கியது
பிணவாடை!

பா.சிவகுமார்



பத்து மாத வாடகை
எத்தனை பணம் பெற்றாலோ
வாடகை தாய்

சாண்டில்யன் விவேகானந்தன்



ஓர் உறையில் இரண்டு வாள்களா?
ஒன்று நீ இரு
இல்லையேல்
மரணம் இருக்கட்டும்.
****
உன் தோட்டத்தின் பூவாக
இருக்கிறேன்
நீ பறித்துக் கொள்ளாவிட்டாலும்
உன்னிடம் தான் உதிருவேன்.
****
என்னைக் காதலாக வார்த்து விட்டு
அச்சு போல்
பிரிந்து போய் விடுகிறாய்.
****
வேருக்கும் பூவுக்கும் உள்ள பந்தம்
நமக்கானது.
செழுமைக்கு
கண்ணீரையா கேட்பது ?
****
காதல் எனும் பாவத்திற்கு
பரிகாரமாக
காதலே இருப்பது தான்
எத்தனை துயரம் !
****
உன் தூரிகை
மாய இழைகளால் ஆனது
காதலைத் தீட்டுவதற்கு
என் இருளைத் தொட்டுக் கொள்கிறது.
****

தி.கலையரசி



நாள் ஒவ்வொன்றும்
என்னைக் கிழித்துச்
செல்கிறது.
நான் நாட்காட்டி
போல தொங்கிக்
கிடக்கிறேன்.
பஞ்சாங்கம் பார்த்து
விட்டு சில நாட்கள்
சிரிக்கிறது.
பல நேரம்
முணுமுணுக்கிறது.
எம கண்டங்களையும்
ராவு காலங்களையும்
சுப முகூர்த்தங்களையும்
ஒருங்கிணைத்துத்
தொங்கும்
என்னைக் கிழிக்கும்
போதெல்லாம்
நிமிடக் காயங்களில்
இருந்து
நொடிக் குருதி
வழிகிறது
காலத்தின் கண்களாக.

திப்பு

ஆத்தூரிலிருந்து கள்ளக்குறிச்சி உளுந்தூர்ப்பேட்டை
விழுப்புரம் திண்டிவனம் செங்கல்பட்டு தாம்பரம்
பல்லாவரம் ரேடியல் ரோடு வழியாக துரைப்பாக்கம்
வரை ஆறு மணி நேரம் சென்று
குழந்தைகளை வீட்டில் பத்திரமாக சேர்த்து விட்டு
இமைக்கும்
ஒரு நொடியில் மீண்டும்
ஆத்தூர் வந்து சேர்ந்தது
மனம்

பூங்கோதை கனகராஜன்

என் மூளைக்குள் எப்போதும்
சலசலப்போடு
ஒரு நதி ஓடிக்கொண்டிருக்கிறது ..
அது கவிதையாக கூட
இருக்கலாம் ....!!

ச. இராஜ்குமார்



உங்களுக்காகத்தான் அவர்கள் தம் வீடு துறந்து
வெளியேறுகிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் தம் உறவுகளை
உதறுகிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் தம்
பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்கிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் காடு மலைகள் பல
கடக்கிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் விதிகளையெல்லாம்
மீறுகிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள்
கையேந்திப் பிரார்த்திக்கிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் எல்லாவற்றையும்
சகித்துக்கொள்கிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் தம் கனவுகளைக்
கைவிடுகிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் இரத்தம்
சிந்துகிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் பாதி இரவில்
உறக்கம் தொலைத்து அமர்ந்திருக்கிறார்கள்
உங்களுக்காகத்தான் அவர்கள் தம்மைப்
பலிகொடுக்கிறார்கள்
உங்களுக்காகத்தான் கடைசியில் அவர்கள்
கண்ணீருடன் விடைபெறுகிறார்கள்

அத்தனைக்குப்பின்னும்
உங்களை
பைத்தியமாய் நேசிக்கும் ஒருவருக்காக
என்னதான் செய்திருக்கிறீர்கள்
நீங்கள்

வெறுமனே
பைத்தியமென அவர்களை வேடிக்கையாய்த்
தொலைத்ததனைத்
தவிர

ரிஸ்கா முக்தார்



நடுக்கடலில் சுருட்டி காகிதபந்தாய் எறிந்து
வந்தமர்ந்தேன்.
பக்கத்தில் கரை ஒதுங்கி
உதட்டை பிதுக்கினாய்..

மலை உச்சியில் தொலைத்து விட்டு
வேகமாய் இறங்கி வந்தேன்..
எனக்கே தெரியாமல் தோளில்
அமர்ந்திருந்தாய்

இரக்கமற்று நெருப்பினில் எரித்து
கண்ணீர் துளிகளின் மீதமர்ந்தேன்
காற்றினில் தவழ்ந்து வந்து
சுவாசத்தில் நுழைந்து விட்டாய்..

அறுத்து வீசி பல முறை
இறக்க துணிகிறேன்
இரக்கமில்லாமல்
உயிர் பிச்சை அளிக்கிறாய்..

எப்படிக்கொல்வது..
தனிமையின் மேல் இலகுவாக
பயணித்தும்..
சின்ன திடுக்கிடலோடு மீண்டும்
கைகுலுக்குகிற
உன் நினைவுகளை..

ச.ஆனந்தகுமார்



சீரியல் பல்புகள்
மின்னுகிற மண்டபத்தின்
முன்னே
இளையராஜாவின் பாடல்
பெரிய ஸ்பீக்கரில்
ஒலித்துக்கொண்டிருக்கிறது
வான வேடிக்கை,
மேளத்தாளங்களோடு
மாப்பிள்ளை பெண்ணை
குதிரை வண்டியில் கூட்டி
வருகிறார்கள்
மண்டபத்துக்கெதிரே
மூங்கில் கூடை
பின்னிக்கொண்டிருப்பவரின்
குழந்தைகள் இங்குமங்கும்
ஓடியாடி
கல்யாண சந்தோஷத்தை
காட்டுகிறார்கள் ...

*ச.ஜெய்*

## Ü¬ôò£ˆF, è£L



அலையாத்திக் கால்கள் உனக்கு

ஆதியிலேயே
உன் பாதசேகரம் கொண்டிருந்தால்
அலைபொங்கி கரைகுடித்திருக்காது கடல்

புலமிழந்தோரின் கண்ணீரில்
கரிப்புசாபம் கண்டிருக்காது அது

வீசுவதற்கும் பருவம் வேண்டிய
காற்றின் காலம் இது

இப்போது நீ
நீலம் உடுத்தி நெய்தலுக்கு
பாத நீராட்டுகிறாய்

ஓர் உப்புக்கடல்
பாற்கடலானது இப்படித்தான்.

கோ. பாரதிமோகன்

இருவருக்கு மட்டுமே
இடமிருக்கும் வீட்டில்
திடீரென முளைக்கிறது
பேரமைதியொன்று
ஆக்டோபஸ் கரங்களால்
வீட்டின் எல்லா மூலைகளையும்
ஆக்ரமிக்க தொடங்குகிறது
எனையன்றி யார் கண்ணுக்கும் தெரியாமல்
பகிரங்கமாக பின்தொடர்கிறது
கண்விழிக்கும் நொடியில்
கோரமுகம் காட்டி பயமுறுத்த
இரவெல்லாம் உறங்காமல்
அருகிலேயே அமர்ந்திருக்கிறது
இருவருக்கு மட்டுமே
இடமிருக்கும் வீட்டில்
இப்போது புதிதாய்
ஏதோ ஒன்று உடைந்திருக்கிறது
ஏதோ ஒன்று முளைத்திருக்கிறது

தீபிகா நடராஜன்



ஆண்கள் தினம்/
நினைவுக்கு வருகிறது/
அப்பாவின் தியாகம்/

பயணக்களைப்பு/
பேருந்து இருக்கையில் சாய்கிறேன்/
அப்பாவின் தோள்/

ரயில் பயணம்/
மறக்காமல் அப்பாவின் கைகளில்/
நான் விரும்பும் மிட்டாய்கள்/

பரந்த உலகம்/
பரவசத்தோடு பார்த்தேன்/
அப்பா உன் தோள்களில்/

அப்பாவின் நரைமுடி/
தெளிவாகத் தெரிகிறது/
உழைப்பின் தியாகம்/

ஜலீலா முஸம்மில்



யாருக்காகவும்
நிற்பதுமில்லை
நடப்பதுமில்லை
பறப்பதுமில்லை

சிலருக்கு போதவில்லை
சிலருக்கு போகவில்லை

விரும்பினால்
சிக்கிக்கொள்கிறது
வெறுத்தால்
விலகிக்கொள்கிறது

ஒரே அளவுகோல் தான்
சிலருக்கு
சுகமாய் கழிகிறது
சிலருக்கு
சுமையாய் கனக்கிறது

ஆண்டாண்டு காலமாய்
தேடிக் கொண்டேயிருந்தேன்
அதன் அதிசய கால்களை...

ஒரு நொடியை
யாருக்காகவும்
கூட்டுவதுமில்லை
குறைப்பதுமில்லை

எதற்காகவும்
யாரையும்
நகைப்பதுமில்லை
பகைப்பதுமில்லை

என் ஒவ்வொரு அசைவிலும்
ஒளிந்தே இருக்கும்
அதன் தனித்துவம் புரிந்தபோது
நானே வெட்கப்பட்டுக் கொள்கிறேன்
எனக்குள்...

அதையும்
கண்டு கொள்ளவேயில்லை
காலம்...

ஜ.தர்மசிங்



குரங்கு குல்லாய் போட்ட
அடுக்கக வாட்ச்மேனின்
மேல் பாக்கெட்டில்
இருக்கிறது ஆயிரத்து
ஐநூறுக்கு வாங்கிய
ஆரஞ்சு நிற குட்டி
நோக்கியா அலைபேசி
அந்தப்பக்கமாய்
நாந்தலுக்கு மஃப்ளர்
கட்டிக்கொண்டு கடந்த
என் காதினில் விழுகிறது
நோக்கியாவின் சல்லடை
ஸ்பீக்கர்களிலிருந்து வழியும்
பாவாடை தாவணியில் பார்த்த உருவமா
நிச்சயதாம்பூல பாடல்.
வேகமாய் நடைப்போட்ட என் கால்கள்
நின்று அப்பாடல் வரிகளை ரசிக்க விழைகிறது .
சக ருசியுள்ளவனை கண்டதாலோ என்னவோ
சத்தத்தை கூட்டுகிறான்
காவலாளி,
மறுபடியும் பிறந்து வந்து மாலைச்சூட்டுவேன்
என்கிற வரிகளில்
எங்கள் பார்வைகள் கலக்க
அரூபமாய் வந்து போகிறார்கள்
பரஸ்பரம் பழகி களித்த
ஜமுனா தேவிகள்.....

கோ. ஸ்ரீதரன்



உங்களுக்கு
நான் என்ன சொல்ல முடியும்
அவர்களுக்கு
நான் என்ன சொல்ல
முடியும்
இல்லை எனக்குத்தான்
என்ன சொல்ல முடியும்
வெற்று சமாதானத்தைத் தவிர
அதனால்தான்
சொற்களைக் கனத்த
மௌனத்திற்கு
இரையாக்கிவிட்டு
கைகளைக் கெட்டியாகப்
பிடித்துக்கொள்கிறேன்
கைகளின் கனப்பு
போதாதா
உணர்வதற்கு

ஒரு காட்டாற்றை தாண்டும்
வண்ணத்துப்பூச்சியின்
ஒரு சிறகசைவு
போதாதா
இந்த நொடியைக்
கடந்து விடுவதற்கு

மகிழினி காயத்ரி

## õNŠ«ð£,è¡!



துயரங்களின் தூரிகைகள்
உங்கள் வாழ்க்கையை
எழுதிச் செல்லலாம்!
முகமறிந்த மனிதர்கள்
உங்கள் மனங்களில்
கல்லெறிந்து காயப்படுத்தலாம்!
வழிகள்தோறும் முட்கள்
கால்களைக்குத்திக் கிழிக்கலாம்
உங்கள் முதுகுக்குப் பின்னால்
உங்களைப்பற்றி
விமர்சனங்கள் எழலாம்!
உங்கள் நேர்மையின் மீது
குறிபார்த்துக் கல்லெறியலாம்!
உங்கள் அன்பு
தூக்கி வீசப்படலாம்
நீங்கள் அழுகையின்
பள்ளத்தாக்குகளைக்
கடந்து வரலாம்
கலங்காதீர்கள்!
காலம் நேர்மையான ஆசான்!
உங்கள் எல்லாத் துயரங்களுக்கும்
உண்மையான தீர்வை
உலகம் தெரிய உணர்த்திவிடும்!

மு. பெ. சத்தியநேசன்



உடலுக்கு வயதாவதைப் போலவே உறவுக்கும்
வயதாகிறது
உடலின் வயது எண்களால் எண்ணப்படுவதைப்
போலல்லாமல்
உறவின் வயது சொற்களால் எண்ணப்படுகிறது
இளமையில் துள்ளித் திரியும் உடல் போல
தொடக்கத்தில் தித்திக்கிறது உறவு
வயதேற ஏற புளிப்பேறும்
வைன்தான் பூரண போதையும் தருகிறது.

காயத்ரி ராஜசேகர்

பறத்தலை
கவனித்துக்கொண்டே
இருந்தது வானம்
நேர்திசையில் சிறகடிப்பதும்
இறகுகளை அசைக்காமல்
வட்டம் அடிப்பதுமாய்
அண்ட வெளியில் சாகசம்
நிகழ்த்திக்கொண்டிருந்தன
பறவைகள்
என்ன பரிபாஷனை நிகழ்ந்திருக்கும்
அதன் பிறகு ஒரு மழை வந்தது.

க. அய்யப்பன்



புரியும்படி எழுதினால்
புதுமையாய் இல்லை என்கிறோம்
விரிவாய் எழுதினால் - ஏன்
இவ்வளவு விளக்கம் என்கிறோம்
எதுகை மோனையோடு எழுதினால்
அந்தக்காலம் என்கிறோம்
நவீனமாய் எழுதினால்
அர்த்தம் புரியவில்லை என்கிறோம்
நான்கு வரிகளில் எழுதினால்
நச்சுனு இல்லை என்கிறோம்
படம் போட்டு எழுதினால்
தெளிவாய்த் தெரியவில்லை என்கிறோம்
எதார்த்தத்தை எழுதினால்
சொந்தக் கதையாக இருக்குமோ என்கிறோம்
உண்மையை எழுதினால்
இவர்கள் இப்படிப்பட்டவர்களா என்கிறோம்
கற்பனை கலந்து எழுதினால்
சாத்தியமா என்கிறோம்
காதல் வரிகளை எழுதினால்
ஒரு எல்லை வேண்டாமா என்கிறோம்
சமூகத்திற்கு ஆதரவாய் எழுதினால்
சால்ரா தட்டுகிறார்கள் என்கிறோம்
எதிராய் எழுதினால்
கொடி தூக்கிடுவோம் என்கிறோம்
கோபமாய் எழுதினால்
எழுதியவருக்கு என்னாயிற்றோ என்கிறோம்
இப்படியேக் கூறினால்
எதை எழுதுவார்கள் எழுதுபவர்கள்?

எவர் என்ன கூறினால் என்ன
எண்ணத்தில் உதிப்பதை
எழுத்துப் பிழையின்றி
விரச வார்த்தைகள் கலவாது
அவரவர்க்கென்று ஒரு பாணியை வைத்து
எல்லோருக்கும் புரியும் வகையில்
எளிய தமிழில் ஏற்றமுள்ள கருத்துக்களை
எழுதிட முயற்சிப்போம் எல்லோருமே!

தி. இராஜபிரபா



‘கருப்பு
எங்க குடும்பத்துக்கு ஆகாது’
துணியெடுக்கப் போகும்போதெல்லாம்
முன்னெச்சரிக்கை செய்கிறாய்...
கரிப்பிடித்த அடுப்படியை
தலைமுறை தலைமுறையாய்
பயன்படுத்திய வெறுப்பாயிருக்கலாம்...
மின்சாரத்துக்கு வசதியற்ற வீட்டில்
இருட்டை விரட்டுவதற்காக
விளக்கேற்றி விளக்கேற்றியே
நொந்துபோன நினைப்பிருக்கலாம்...
கருந் தோலை இழிவுசெய்து
அடிமைப்படுத்திய
ஆண்ட சாதி மேட்டிமை வடு
வலி தந்திருக்கலாம்...
உடனிருந்து
உவப்பாகப் பேசி
துன்பஞ்சூழ் தருணமொன்றில்
கரி பூசிய கோபமிருக்கலாம்...
நிறங்களில் பேதங்களில்லை
கருமையில் தாழ்வில்லை
அத்தனை நிறங்களும்
கருப்பில் தான் அடக்கம்
பெருவெளியின் நிறம் கருமை
இருளே அனைத்து உயிர்களின் ஜனனப்புள்ளி
இருள் தான் வியர்வையின் ஓய்வு
இருள்தான் விடியலின் தொடக்கம்
இருள் போர்த்து
கருமை போற்று...

வத்திராயிருப்பு தெ.சு.கவுதமன்



கொத்தாய் தொங்கிய
நாதஸ்வரப் பூக்கள்
உதிர்ந்த பின்னும்
கீதமிசைக்கிறது
பன்னீர் கலந்து
ஐப்பசியின் வாசனையை

சுஜாதா கண்ணன்

இரட்டை சடை
கற்றை பூக்கள்
வெள்ளை சந்தனம் குழைத்து பூசிய நிறம்
வளைவு சுளிவு தேகம்
பேருந்து வந்து விட்டது
கை அசைத்து வழி அனுப்பும் அந்த
முருங்கை மரம் அத்தனை அழகு

கதிரவன் வீ



கைகளில் ஏந்தி
உச்சி முகர்ந்து எனக்கு
முதல் முத்தம் தருகிறார் அப்பா
ஆனந்தக் கண்ணீருடன்.

உச்சி முகர்ந்து நான்
கடைசி முத்தம் தருகிறேன்
அப்பாவுக்கு
கட்டுக்கடங்காத கண்ணீருடன்.

அப்பாவைப்போல இருக்கிறாய்
என்று பலரும் சொல்வார்கள்
இதுவரை என் பிம்பத்தை
காட்டிய கண்ணாடி
இன்று முதன்முதலாக
அப்பாவின் முகத்தைக் காட்டுகிறது.

இப்போதெல்லாம் நான்
அடிக்கடி கண்ணாடி பார்க்கிறேன்.

செ.ரா.கிருஷ்ண குமாரி

தன் கையெழுத்தை
மெல்ல மெல்ல
எழுதி நிமிர்கையில்
ஓவியம் வரைந்த திருப்தி
அம்மாவுக்கு

மகேஷ் சிபி



உதிர்ந்து விழும்
எந்த இறகும் சுருண்டு விழுவதில்லை!

பறக்கும் பறவைக்கு
கையசைத்து விடை கொடுத்து
அசைந்து பறந்து
இலகுவாகவே இறங்கும்!

உதிர்வதெல்லாம் வீழ்வதற்கல்ல
தாங்க ஒரு தவக் கரமோ
ஈர்க்க புவியின் வரமோ
இருக்குமென்று இறகுக்கு
தெரியும்.....

ஒரு மேதகு தலையின்
கிரீடம் அலங்கரிக்கவோ ஓவியன் கையில்
தூரிகையாகவோ
சிறு கூடொன்றின்
கட்டுமான பொருளாகவோ
அன்பினிக்கும் இதயமுள்ளோர்
வீட்டின் அலங்காரப் பொருளாகவோ இறகின்
பயணம் தொடரும்!!

உதிர்த்து செல்லும் பறவையின் வலி
உணர்ந்தே இருக்கும் இறகுகள்
வளி நோக்கி வாழ்த்துச் சொல்லும் பறவையின்
பயணம் இனிதாக!!

உதிர்ந்த இறகுகள்
ஒரு போதும்
உலர்ந்து போவதில்லை!!

ஜோதி சரண்



சிகிச்சைக்கு வந்த
தளர்ந்த பெரியவர் ஒருவர்
தயங்கியபடியே
“வைத்தியத்துக்கு
என் பொண்ணு
பணம் அனுப்புறேன்னு சொல்லிச்சு
அவகிட்ட கொஞ்சம்
உங்க ஜி.பே நம்பர் சொல்லுங்க”
தன் பட்டன் போனில்
மகளிடம் பேசிவிட்டு
என்னிடம் தருகிறார்
“அப்பாக்கு எப்படி இருக்குங்க சார்?”
நலம் விசாரித்துவிட்டு
என் எண்ணை எழுதிக் கொண்டவள்
“ஆயிரம் ரூபாய் அனுப்புறேன்
முந்நூறு ரூபாய் ஃபீஸ் போக
மீதம் எழுநூறு ரூபாய்
அப்பா கிட்ட கொடுத்திடுங்க
கேட்க கூச்சப்படுவாரு”
அழைப்பை வைத்து விடுகிறாள்
மீதி பணத்தை பெரியவரிடம்
கொடுக்கையில்
கண்ணீர் துளிகள் கசிய
வாங்கிக் கொள்பவர்
மீண்டும் மகள் எண்ணுக்கு அழைத்து
“எதுக்குடா பட்டுக்குட்டி
இப்படி எல்லாம் பண்ற?”
நா தழுதழுக்க கேட்டபடியே
ஆனந்த நடை போட்டு போகிறார்
இப்படித்தான் 40 வயதை கடந்தும்
பட்டுக்குட்டிகளாக வாழ்கிறார்கள்
பட்டுக்குட்டிகள்.....

பிரபுசங்கர் க



நான் உன்னிடம் பல முறை
பல சமயங்களில்
பல விதமாக சொன்ன வார்த்தை...
நீ என்னிடம் இதுவரை
சொல்லாத வார்த்தை..

நான் சொல்லும் பொழுது
நீ அலட்சியம் செய்த வார்த்தை..
நீ சொல்ல கேட்க
நான் ஏங்கிய வார்த்தை...

என் விரல் நுனி உன்னை எண்ணி
கிறுக்கிய வார்த்தை..
நீ கசக்கி எரிந்த காகிதத்தில்
புதைக்கப்பட்ட வார்த்தை...

சொல்லிவிட்டு போயென்று
நீ செல்லும் பொழுது
பட்டென்று உன் கைபிடித்து
நான் இழுக்கும் பொழுதெல்லாம்
உதறி விட்டு நீ நடக்கையில்
சிதறி போகும் வார்த்தை...

நீ சொல்வாய்
ஆனால் உன் பல் வரிசை தான்
சொல்ல விடாமல் உன்னை தடுக்கின்றதென்று
நான் நம்பிக்கொண்டிருக்கும் வார்த்தை..

இல்லை
அவள் உன்னிடம் என்றுமே அவ்வார்த்தையை
சொல்லமாட்டாள்
ஒருவன் தூரத்திலிருந்து குரலெழுப்புகின்றான்...
இல்லை
நான் நம்பபோவதில்லை
அவன் பிதற்றுகிறான்
அவனுக்கு புரியாது
இப்படி தான்
அவன் நாத்திகம் பேசுவான்.

*சரண்யாசத்தியநாராயணன்*

«ñ¬ ì



எனக்கும் உனக்குமான
ஆசைகள் ஒரே மேகமாய்
திரண்டு
நிலத்தில் சிந்தின..

தீராத இசை லயத்தோடு
கடலாகும் மேகங்கள்
இந்திரலோகமாய் மாறிப்போயின..

என் காதோரமாய்
உன் இதயத்தின் ஓசை
பேரிரைச்சலைத் தாண்டியும்
ஒரு நொடியின் துடிப்பில்
ஓராயிரம்
காதல் கதைகளை
சொல்லிக் கொண்டிருந்தது..

ஆழியில் எழுந்த
அலைகளில்
உயிர் பெற்று
ஆடிக்கொண்டிருந்தது
நமக்கான கனவுகள்..


அலை ஏறி மிதக்கும்
குமிழ்கள்
நீரள்ளித் தெளித்து
கவிதையின் வாசல் திறந்து
எழுதத் சொல்லி அழைக்கிறது..

குமிழ் மீது உடையும்
ஒலிகளில் உதிரும் சொற்களை
என் பேனாவை வேண்டுமென்றே
தொலைக்கிறது மௌனமாய்..

சங்கரி சிவகணேசன்

கலைந்து கிடக்கும் மேடையை ஒருவர்
சிரிப்பால் அலங்கரிக்கிறார்...
அலைவரிசைப் போகும் திசையில்
ஒருவர்
கதைத்துக் கொண்டிருக்க
எப்போது முடியும் என்று ஒருவர் அவசரம்
கூட்டுகிறார்!
சொற்களால்
மேடைக் கட்டிய பிரபலம்
தட்டலோசைக்கு சரியாக நிறுத்தி வைக்க
சுயமிப் பக்கங்களால்
பறவைகள்
உலகம் முழுவதும் பறந்து கொண்டிருக்கின்றன!
மேடை என்பதும் கூட
உண்மையில் ஓர் அலங்கார வார்த்தைதான்...

முகமது பாட்சா



எஞ்சிய பருக்கைக்கெல்லாம்
பிறவிப்பயன் தந்துபோனதோ....

வெந்துவிட்டதாயென
பதம் பார்க்கையில்
செத்தொழிந்த
அந்த
முதல் பருக்கை.

அன்பு மணிவேல்

கண் மருத்துவமனையில்
பரிசோதனைக்காக
காத்திருக்கையில்
விலைப் பட்டியலை தவிர
எல்லாமே
மங்கலாய்த் தெரிகிறது.

காசாவயல் கண்ணன்

# Ü‰Gò Ì



சிறுதூறலுக்கே குடைதேடும்
யாரிடமும் பெருமழையின்
இசையையோ ஆர்ப்பரிப்பையோ
பேசுவதற்கு ஏதுமில்லை...

நேற்று பார்த்த ஆட்காட்டியல்ல
இன்று காண வாய்த்தது
அன்றன்றைக்கான பறவைகளில்
நேற்று என்பது அந்நியமாகிறது...

நேற்று சுவாசித்த நறுமணம்
நினைவுகளாய் எஞ்ச
அன்றன்றைக்கான மணங்களில்
நேற்று என்பது அந்நியமாகிறது...

நேற்று மலர்ந்த மலர்கள்
புகைப்படமாய் கிடக்க
அன்றலர்ந்த மலர்களில்
நேற்று என்பது அந்நியமாகிறது...

இப்படிதான்
அந்நியப்பட வேண்டியதாகிறது
மனிதர்களிடமும்...

நேற்று எனுமளவிற்கு
காலதாமதங்களில்லை
அன்றன்றைக்கே அந்நியமாகிறார்கள்...

இப்போதெல்லாம்...

நேரம் காலம் அறிவிக்காது
எல்லோருக்குமாக பெய்துவிடும்
சிறு மழைக்கு குதூகலிக்கும்
மனதைதான் கிழிக்கிறீர்கள்...

உதிரும் இலையின்
மென்மையோடு உதிர்கிறது
அந்நியமானவர்கள் மீது
ஒரு புன்னகை பூ !

கோ.லீலா



எழுத்துக்களை ஆண்டு
கவிப்பேரரசியாகிட எண்ணியவளை
கவிமாயவலை சுருட்டி வாரிக் கொண்டது
முதுகில் உப்பு மூட்டை சுமந்து
கோளயுலகை
பிச்சம்மா ஆயாவின்
கடை தோசையாக காட்டியது
ஓரம் தீய்ந்த தோசை
தோசையை விண்டு விழுங்கையில்
சிக்கிக் கொண்டது
குவளை நீருடனோடி வந்த
எழுத்துக்களை
கடைவாயில் அடக்கிக் கவி பாடினேன்
கவிதைகளின் கால்கள்
குரல்வளை நெரிக்க
கவிதைச்சாவு எனக்கு
சாளர சிறுதுளையில்
எப்போதும் போல்
எட்டிப் பார்த்த
அயல்வீட்டினன் சொன்னான்
‘பூடுச்சு
ஆனா நல்ல சாவு’
ஓண்ணாம் நம்பர் பாடு யாருக்குடா நல்ல சாவு
நான் எகிற
நல்லாப் பாரு
நாக்கு சுழிச்சுக்கினு
‘ழ’ மாதிரி தொங்குது
குனிந்துப் பார்த்தேன்
உண்மை தான்
எனக்கு நல்ல சாவு

எஸ்தர் ராணி



இல்லை
தோழனே...

என்
அழுகைக்கு
அர்த்தங்கொள்ள முடியாது
உன்னால்...

என்
கண்ணீரை
கற்பனை செய்ய
முடியாது உன்னால்....

என்
விம்மலுக்கு
விளக்கம் சொல்ல
முடியாது உன்னால்...

என்
கனவுகளின்
ஆழம் காணமுடியாது
உன்னால்....

என்
ஆசைகளின்
ஆவலை அறியமுடியாது
உன்னால்....

என்
ஏக்கங்களை
எழுதமுடியாது
உன்னால்....

ஆழகுழி தோண்டி
அடையாளம் வைக்காமல்
தூரத்திலே புதைத்து
விட்டேன்...

கூடவே
நான் வைத்திருந்த
தாய்வீட்டு வசந்தத்தையும்....

எல்லோரும்
இனிமை என்றார்களே
இந்த வாழ்வை....

எங்கே
என்று சொல்லவில்லையே...

கே.பாலன் வடக்கத்தியான் பட்டி



எனக்கும் ஆசை தான்
தினமும் சமுத்திரத்தில்
கால் நனைத்தபடி
கவிதை எழுத வேண்டுமென்று

எப்படி முடியும்?
என்னை விட்டு
தூரமாய் இருக்கிறதே சமுத்திரம்

காதலனைத் தேடி செல்வதைப்போல
கடலைத் தேடி சென்றிருக்கிறேன்

என்னைக் கண்டதும்
கடல் அலைகள் ஓடி வந்து
என் கால் தொட்டது இன்னும்
நினைவில் இருக்கிறது

அவன் கூட என்னை
குளிக்க வைத்து கொஞ்சியதில்லை
அலைகள் என்னை குளிக்க வைக்காமல் விட்டதே
இல்லை

நான் ஒரு நல்ல கவிதை எழுத
ஒரு பேனாவும் நோட்டும்
கொஞ்சம் சுண்டலும்
ஒரு கடலும் தேவைப்படுகிறது

எதுவுமே இல்லாவிட்டாலும் பரவாயில்லை
எல்லோரும் கழட்டிப் போடும் காலணிகளுக்கு
என்னை காவலாவது வையுங்கள்

எனக்கு கவிதை எழுத ஒரு கடல் தேவைப்படுகிறது.

கவி செல்வா

# âù,° ªè£…ê‹ èM¬îèœ «õ‡´‹…



என்னை கொஞ்சமாய் கொஞ்சிடு
சீண்டிவிட்டு வெறுப்பேத்து
கண்களை மறைத்து விளையாடு
கோபமாய் பேசி என்னோடு பேசாமலிரு
நான் பேசினாலும் அலட்சியப்படுத்து
சண்டையிட்டு சமாதானம் செய்ய
முயற்சி செய்...

என்னை அழ வைத்து
என் அன்பின் ஆழம் உணர்
அவசரமாய் எதிர்பாரா முத்தமொன்றை
உதிர்த்து செல்...

ஆக்ரோஷமாய் இழுத்தணைத்து
காதுமடல் கவ்வு
சமையலில் உப்பில்லையென
உதாசீனப்படுத்து..

பிள்ளைகளுக்கு முத்தமிட்டு
என்னை தவிக்கவிடு..
விரல்களுக்குள் விரல்களை
விரலிடைச்சவ்வென
இதமாய் நுழைத்து
வெப்பம்தனை பதமாய் பரவவிடு..

என் விரல்களுக்கு சொடுக்கெடு
இதழோடு இதழ் புதைத்து
உணர்வுகளோடு உயிரை
இழையோடவிடு...
ஏன் இப்படி விசனமாய்
புருவம் சுருக்குகிறாய்?
பைத்தியக்காரி இவளென்று எண்ணியா?..

அட கிறுக்கா..
வேறொன்றும் இல்லை
எனக்கு கொஞ்சம் கவிதைகள் வேண்டும்
அவ்வளவே...

சசிகலா திருமால்



கொப்பாடுக மேயும்  கடுங்காட்டு மத்தியில வெங்கம் பய மேஞ்ச
பூதவுடலுக்கு என் தங்கச்சி பேரு.
சாக்காடு பாத்த நெறத்த
மேக்கால வெதச்சிருக்கேன்.
அந்த உசுருக்கு எம்பேரு.

கோடங்கி சாமத்துல வெடிச்ச கத
காத்தால கோலத்துல விடிஞ்சிருக்கு.
ஆத்தாவ கொன்னவன் பேரு
கோயில்கெடா நெத்தியில எழுதிருக்கு.

சாதிக்கு மொகர வீங்க
ஆதிக்க மனம் படைச்ச வேதத்தாரே
நான் சாதிச்சு காட்டையில
ஆத்துக்கோ கொளத்துக்கோ
எம்பேர ஆனகட்டி வைப்பீரோ..
ஆள வெட்டி பொதப்பீரோ..

சித்தெறும்பு வெசனஞ்சொல்லி
கொள்ளிச் சங்கு ஊதுது.
சல்லிப்பய ஒடம்புகள
ஒட்டுறவா தச்சுக்கங்க.

சாதியித்த காலம் வந்தும்
புத்தி பேதலிச்ச பாவிகளா
ஆவியடிச்சோ இந்தப் பாவியடிச்சோ
நாதியத்த நாட்டுக்குள்ள
வேரு மக்கி ஒறங்கப் போறீக.

நான் சாமி நம்பமாட்டேன்.
சாதி நம்பமாட்டேன்.
வாழுங்கெணறு பொட்டச்சி வயிறு

எந்த தண்ணி குடிச்சீங்கடா
சாதி மொத்தமும் சாக்கட மசுரு.

ஜே.ஜே.அனிட்டா

## ÜŠð£M ¡ ¡´.



இப்போதும்
தொலைந்து போன
ஒரு ரிப்பனை தேடுவதாக
என் நாட்கள் நகர்கிறது.
சொந்த ஊருக்கு
செல்லும் போதெல்லாம்
தேடுகிறேன்.
ஊர் மட்டும் இருக்கிறது.

குடந்தை அனிதா

இரவெனும் கிழிந்த பாய் –
எப்படியும்
வாழ்ந்து முடித்து விடலாம்
இந்த வாழ்வை

தன் அந்த காலத்து
உடல் வாகிற்குள்
பொருந்தாமல் தவறி விழும்
விதியின் மிதிபட்டு நைந்த
விலை மாதர் போல்.

சம்பத் கிருஷ்ண குமார்

நீயும் சுரக்கிறாய்
தூசு விழுந்துறுத்தும்
நோக்காட்டில் நீர் சுரக்கும் கண்களில்

முகம் கழுவி மறைக்கிறேன்
கண்ணீருக்கான காரணம்
நீயென்பதை அறிவிக்க மனமின்றி

வெற்றிடத்தை உணர்த்துகிறது
தோளிலும் மனதிலும்
தூக்கி வைத்த உன் பெயர்

நீயென்றால் பயம்
அப்போது
நானென்ற சுயம்
இப்போது

உள்ளிருந்த நீ
ஆவியாகி
மேகமாகி
மழையாக மட்டும் ஆகாமல்

ஏமாற்றுவதில்
மழையும் கடவுளும் கைகோப்பதுண்டுதானே

கையேந்தி நிற்கும் தாவரமாக
விவசாயி
மண்புழுதி மேனியுடன்

ரா.ராஜசேகர்



யாரோ
ஆக்கிய இருளுக்குள்
நான் ஏன்
இன்னுமிருக்க வேண்டும்?

நான்
விளக்கேற்றப் போகிறேன்.
அந்த விளக்கொளியை
நீங்கள் ஏற்றாலும் சரி!
உங்களது கரங்களால்
ஆளுக்கொரு விளக்கை
ஏற்றினாலும் சரி!

நான் தடுக்கப்போவதில்லை.
நீங்களும்
யாரையும் தடுக்கவேண்டாம்.
இருளை ஆக்கிய யாரோவும்
இந்த வெளிச்சத்தில்
நடந்துசெல்லட்டும்.

கா.ரஹ்மத்துல்லாஹ்

கிழிந்திருக்கிறதாம் குடை
வறுமையை
குத்திக்காட்டுகிறது மழை

வேகமாக வந்தாலும்
அவரை மட்டும்
மெல்ல எட்டிப் பார்க்கிறது மழை

குடைக்குள் வானம்
ஒழுகிறது வறுமை
நனைகிறது கண்ணீர்

இயலாமையை பெரிதாக காட்டிவிட்டு
வானத்தை சின்னதாக
காட்டுகிறது குடை

குடையில் விழுந்த மழை
துள்ளிக் குதிக்கிறதாம் உள்ளே
தனக்கு முத்தமிட்ட பின்னே
தரையிறங்குகிறதாம்
பூரிக்கிறார் விவசாயி

நயினார்

# ñ¬ö



வனம் பற்றிய கதை
சொல்லிக்கொண்டிருந்த
என் இரவின் நீளம்
உன் கைக்கு எட்டுமளவுதான்

சிறு மீனாய்
நான் சிலாகிப்பதும்
சிலிர்த்து போவதும்
நம் அகப்பெருங்கடலில்

பெருங்கடல் பசிக்கு
இரையாகிப்போன
பெருநதிகளின்
மிச்சம் நான்.....

மருதம்.ஷப.கஜலஷ்மி

இதே போன்றதொரு
மழை நாளில்தான்
மழை நீரில் ஊறிய சொற்களை
அரச மரத்தடியில்
வைத்து சாமியாக்கி
மழையைப் பறிமாறிக்கொண்டோம்..

தோழன் பிரபா

மீண்டும் ஒரு வசந்தகாலத்திற்காய்
பயணத்தை நீட்டித்துக்கொண்டே
இருக்கிறது வேர்
பிடிமண்ணை இறுகப்பற்றி
கோடையின் பகலாய்
சுட்டெரித்துக்கொண்டிருக்கிறது
ஆற்றாமை
காலச்சக்கரம் நின்றுபோய்
நீண்டநாட்களானதாய் தினமும்
அச்சமூட்டிக்கொண்டேயிருக்கிறது
பிரம்மை
கோடைக்கால மேகங்கள்
நிலமிறங்காமல்
நகர்ந்துபோகின்றன
பல்லிடுக்கில் நெறிபடும் கோவங்களென
நசுங்கிக்கொண்டிருக்கின்றன
மில்லிமீட்டர் கீழிறங்கும் வேர்

யாழினி



என்பவர்களைக்
கண்டால் கண்ணை
மூடிக்கொள்
காதை அடைத்துக்கொள்

நீயேன் கொதிக்கிறாய்
நீயேன் குளிர்கிறாய்

புடம் போட்டுக்கொள்ளவோ
புதையல் எடுக்கவோ
பட்டயம் வாங்கிக்கொள்ளவோ
விருப்பம் எனில் அரவத்தின் நடுத்துண்டை
எடுத்துண்

இல்லாவிடில் வேடிக்கை பார்
துணைக்கு புத்தனை அழைத்துக்கொள்

அங்கீகாரங்களை
அப்படித்தான் பெற்றுக்கொள்ள
வேண்டும் என்கிற நிர்ப்பந்தம்
பற்றிய உன் கவலை யாருக்கும்
அநாவசியமானது

அவர்களின் கவலை
அதுவல்ல எனவே
அவர்களைப் பற்றிய
உன் கவலையைத்
தூக்கியெறி..

வார்த்தைகளை எப்படி
வேண்டுமானாலும்
விளையாடலாம்

நீ சொல்வது தான்
கவிதை
அதன் நிறம் தரம்
பற்றி நான் ஒன்றும்
கூறப்போவதில்லை

ஒரேயொரு நல்ல கவிதையை
ஒரு நாள் புசித்து வாழும்
உன்னைப் போன்றக் கவிதை
பிரியர்களுக்கு ஆதங்கம்
மனச்சோர்வை அளிக்கக்கூடும்

மௌனத்திற்கு
அதி மௌனத்திற்கு
பக்கத்தில் போய் அமர்....

உமா மகேஸ்வரி பால்ராஜ்


RN BALAJI PRODUCTION
FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP - MARUTHA NAYAGAM BOSE - MUSIC - DEV PRAKASH
EDITING -TAMILARASAN - CHOREOGRAPHER - ABU&CHALAS - PRO - NIKIL MURUGAN
CO PRODUCERS - MOHAMED ALI JINNA.M - SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY-BALAJI NEDUNCHEZHIYAN